சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – பகுதி II திட்டம் 2010–2011 – தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், வெங்கம்பட்டி கிராமத்தில் உள்ள மலட்டாற்று ஓடையின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டும் பணியை 2010–2011ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துதல் – ரூ.30.00 இலட்சம் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ப்பி2) துறை

அரசாணை (நிலை) எண் 157 | நாள் 27.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்கப்பட்டது:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் எப் / 7575 / பகுதி II / 2010-2011, நாள் 27.01.2010.

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், அச்சன்குளம் கிராமப் பகுதியிலிருந்து மலட்டாறு கட்டோடை உற்பத்தியாகி இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. இடையில், அச்சன்குளம், அத்திகிணறு, வாலம்பட்டி ஏரி மற்றும் எப்போதும் வென்றான் நீர்த்தேக்கம் ஆகிய நீர் ஆதாரங்களுக்கு நீர் அளித்த பிறகு மலட்டாற்றின் அதிகப்படியான நீர் வங்கக் கடலில் கலக்கிறது. எனவே, மலட்டாறு உற்பத்தியாகும் இடத்திலிருந்து கீழ்புறமாக ஆற்றின் 11வது கிலோ மீட்டரில் ஒரு அணைக்கட்டு அமைத்தால், வங்கக் கடலில் வீணாக கலக்கும் நீரை கடலுக்கு செல்லாமல் பாசன நிலங்களுக்கு பயன்படுத்தும் வாய்ப்புள்ளது. இதனால் விவசாயம் பெருகி அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். குடிதண்ணீருக்கும் பஞ்சம் ஏற்படாமலிருக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் 20 மில்லியன் கனஅடி நீர் சேமிப்பு செய்து சுமார் 20 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க இயலும். மேலும், அருகில் உள்ள வேங்கம்பட்டி மற்றும் டி.சண்முகபுரம் கிராமங்களில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதோடு, தரமும் உயரும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிலங்களை கையகப்படுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2010–2011ம் ஆண்டில் ரூபாய் 30.00 இலட்சங்களாகும். இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது.

2. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூபாய் 30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) செலவில் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், வெங்கம்பட்டி கிராமத்தில் உள்ள மலட்டாற்று ஓடையின் குறுக்கே, ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) செலவில், புதிய அணைக்கட்டு கட்டுவதற்கு 2010–2011ம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறைச் செலவினம், சிறு மேற்பார்வைச் செலவுகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்தச் செலவுகள், மொத்தப் பணி (Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேலும், இத்திட்டப் பணிக்கான செலவினம், மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை விட எக்காரணம் கொண்டும் அதிகரிக்கச் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4702 00 சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16 பெரும்பணிகள் (த.தொ.கு 4702 00 101 JA 1607)"

5. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் 17.05.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 25479 / பொ.ப. II / 2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட கருவூல அலுவலர், தூத்துக்குடி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ&இ), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை 1), சென்னை–18.
நகல்
நிதித் (பொ.ப. II/வ.செ (பொது II) துறை, சென்னை–9.
பொதுப்பணித்(சி.பா.1)துறை, சென்னை–9 (5 நகல்கள்).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்